அ.வ.எண்.22/2023

பெயர் – குருசாமி (வா.சா.1)

தேதி – 05.01.2024

குறுக்குவிசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் தற்போது எலக்ட்ரிசியனாக பார்க்கிறேன். எனது பெயர் குருசாமி, எனது தகப்பனார் பெயரும் குருசாமி என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் பெருமாள் என்றால் சரிதான். காளியம்மாள் யார் என்றால் முதலில் யார் என்று தெரியாது. 2022ல் தான் தெரியும். காளியம்மாளுடன் பிறந்தவர்கள் 2 சகோதரிகள் உள்ளார்கள் என்றால், தெரியாது. காளியம்மாளுக்கு 2 சகோதரிகள் உள்ள விபரம் எனக்கு தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் படந்தாலில் குடியிருந்து வருகிறேன். நாராயணன் என்பவரின் மகள் தான் காளியம்மாள் என்றால் தற்போது தான் அதனை தெரிந்து கொண்டேன். எனக்கு சொந்த ஊர் எது என்றால் சங்கரபாண்டியாபுரம் ஆகும். நானும், பிரதிவாதி காளியம்மாளும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் வீட்டிற்கு அருகில் காளியம்மாளின் வீடு உள்ளதா என்றால் இல்லை. தாவா சொத்தை எனது தகப்பனால் எனக்கு எப்போது எழுதிக் கொடுத்தார் என்றால் 2002ம் ஆண்டு எழுதிக் கொடுத்தார். தாவா சொத்தை காலியிடமாகக் காண்பித்து தான் எனது தகப்பனார் 2002ம் ஆண்டு தானசெட்டில்மெண்ட் ஆவணம் எனக்கு பிறப்பித்துக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இடிந்த வீட்டுடன் இருந்ததால் அவர் அவ்வாறு எழுதிக் கொடுத்துள்ளார். இடிந்த வீட்டுடன் இருந்ததால் அவர் அவ்வாறு எழுதிக் கொடுத்துள்ளார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது தந்தைக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் பூர்விகமாக அனுபவித்து வந்த சொத்தாகும். தாவா சொத்துக்கான பட்டாவோ அல்லது வேறு ஆவணம் எதுவும் எனது தகப்பனார் பெயரில் இல்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் தாவா சொத்தை பூர்விகமாக அனுபவித்து வந்ததாக சொல்வது பொய் என்றாலும், நான் தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு எனது தகப்பனார் தானசெட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்துக் கொடுப்பதற்கு முன்பாகவே

கதவு எண்.1/157 என்று கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். கதவு எண்.1/157 கொண்ட வீடு மற்றும் 8 வீடுகளை அரசாங்கம் இலவசமாக கட்டிக் கொடுத்த வீடுகள் என்றால் சரியல்ல. கதவு எண்.1/157 கொண்ட வீடானது அரசாங்கத்தால் பிரதிவாதியின் தகப்பனாரான நாராயணன் என்பவருக்கு கட்டிக்கொடுத்த இலவச வீடு என்றால் சரியல்ல. அதனால் தான் தாவா வீட்டிற்கு அரசாங்கம் நாராயணன் பெயருக்கு பட்டா எண்.350 வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கான வீட்டு வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. தாவா வீட்டிற்கு எனது தகப்பனார் பெயரில் எந்தவித வருவாய்த்துறை ஆவணங்கள் இருப்பதாக நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா வீட்டை அபகரிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு மோசடியாக வரிவிதிப்பு இரசீதை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எப்போது இறந்தார் என்றால் 2007ம் ஆண்டு இறந்தார். எனது தகப்பனாருக்கான வாரிசு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து நாராயணனின் பிள்ளைகளான காளியம்மாள் மற்றும் அவரது சகோதரிகளுக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் சரியல்ல. காளியம்மாள் தனது தாய், தந்தையர், சகோதரிகளுடன் தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. நான் தான் அனுபவித்து வந்தேன். தாவா சொத்திற்கு என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் இல்லை. தாவா வீடு சற்று சிதிலமடைந்த நிலையில் இருந்ததால் குடியிருக்க முடியாத சூழலில் பழைய பொருட்களை போட்டு பிரதிவாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டதென விளம்புகை பரிகாரம் நான் கோராத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. காளியம்மாளின் சகோதரிகள் இருவரும் அவசிய தரப்பினர்கள் என்பதால் அவசிய கட்சியினரை கட்சி சேர்க்காத தோசத்தினால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காளியம்மாள் மற்றும் அவரது சகோதரிகள் துப்புரவு பணியாளர்களாக பல இடங்களில் பணிபுரிந்து வருவதால் அந்த வீடு சிதிலமடைந்த நிலையில் இருப்பதால் அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தாவா சொத்திற்கு என் பெயரில் மோசடி ஆவணங்களை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சிதிலமடைந்த வீட்டினை மராமத்து செய்வதற்காக அரசாங்கம் கடந்த 2005ம் ஆண்டு வழங்கிய தொகையானது காளியம்மாளுக்கு சேர வேண்டியது

என்றாலும், அதனையும் நானே மோசடியாக வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் அனுபவித்து வருவதால் நானே வாங்கினேன். நான் அனுபவம் செய்து வருவது பொய் என்றால் சரியல்ல. தாவா வீட்டிற்கான பட்டா எண்.350 ஆனது காளியம்மாளின் தந்தை நாராயணன் பெயரில் தான் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வீடு நாராயணனுக்கு பாத்தியப்பட்ட வீடு என்பதால் தான் நான் இன்று வரை அந்த பட்டாவை பற்றி நன்கு தெரிந்து கொண்டே அந்த பட்டாவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. தவா சொத்தில் உள்ள வீடு இன்றளவும் இடிந்த நிலையில் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதி காளியம்மாளின் தகப்பனார் நாராயணன் பெயரில் உள்ளது என்பதை காண்பிப்பதற்கான ஆவணங்கள் பிரதிவாதி வசம் உள்ளது என்றால் அவரிடம் இல்லை. தாவா வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோரினால் வழக்கு எனக்கு விரோதம் ஆகிவிடும் என்ற காரணத்தினால் தான் நான் விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா வீட்டை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றாலும், மோசடி ஆவணங்களை உருவாக்கியுள்ளேன் என்றாலும் நான் மோசடி ஆவணம் உருவாக்கியுள்ள விபரத்தை இந்த வழக்கு அழைப்பாணை வந்த 01.01.2023 தேதியன்று தான் பிரதிவாதிக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. தாவா வழக்கை தாக்கல் செய்வதற்கு எனக்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.